# அறநெறி அமுதம்


ஆன்மீக விழுமியக் காலாண்டிதழ்



இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை
40, ராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06.

அமுதம் 4 துளி 1

## நூல் அறிமுகம்



### ஸ்ரீ ராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்

எமது சமயத்திலுள்ள அரிய கருத்துக்களை எளிய முறையில் எடுத்துரைத்து இந்துமத மறுமலர்ச்சியையும் சமய சமரசத்தையும் ஏற்படுத்தியவர் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

இதற்கு அவர் கையாண்ட வழிகளில் ஒன்று பாமரர்களும் புரிந்து கொள்ளக்கூடிய மிக எளிதான கதை வடிவமாகும். இந்நூல் அவ்வாறான சில அரிய கதைகளின் தொகுப்பாக 'ஸ்ரீராமகிருஷ்ணர் சொன்ன கதைகள்' என்ற பெயரில் மயிலாப்பூர் ஸ்ரீராமகிருஷ்ண மடத்தினரால் வெளியிடப்பட்டுள்ளது. இந்நூல் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் படித்துப் பயனடைய வேண்டிய ஓர் அரிய நூலாகும்.

விலை ரூ. 34/=

# பிரார்த்தனை



குருர்ப்ரஹ்மா குருர்விஷ்ணு: குருர்தேவோ மஹேஸ்வர:
குரு:சாக்ஷாத் பரம் ப்ரஹ்ம தஸ்மை ஸ்ரீகுரவே நம:

ஓம் ஸ்தாபகாய ச தர்மஸ்ய ஸர்வ தர்ம ஸ்வரூபிணே
அவதார வரிஷ்டாய ராமகிருஷ்ணாய தே நம:

ஜனனீம் ஸாரதாம் தேவீம் ராமக்ருஷ்ணம் ஜகத்குரும்
பாதபத்மே தயோ: ச்ரித்வா ப்ரணமாமி முஹுர் முஹு:

நம: ஸ்ரீயதிராஜாய விவேகானந்த ஸூரயே
ஸத் சித் சுக ஸ்வரூபாய ஸ்வாமினே தாபஹாரிணே

அறிவார் அமரர் தலைவனை நாடிச்
செறிவார் பெறுவர் சிவதத் துவத்தை
நெறிதான் மிகமிக நின்றருள் செய்யும்
பெரியாருடன் கூடல் பேரின்பம் ஆமே!

இதுவே நல்வழி என்று வழிகாட்டும் பெரியார்களுடன் கூடிப் பழகினால் இறைவனை உணர்ந்து பேரின்பப் பெருவாழ்வு பெறலாம்.

\- திருமந்திரம் -

ராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை.
40, ராமகிருஷ்ண வீதி, கொழும்பு - 06.

அமுதம் 4 துளி 1

## இந்த இதழில்...


| பக்கம் | தலைப்பு | எழுதியவர் |
|---|---|---|
| 1 | பிரார்த்தனை | |
| 2 | ஆசிரியர் உரை | |
| 3 | நம்மிடத்தில் நம்பிக்கை! இறைவனிடத்தில் நம்பிக்கை! | பிரணவன், ஆண்டு 9 |
| 4 | நாமும் பயில்வோம் | பிரசாத் |
| 6 | ஸர்வதர்ம ஸ்தாபகர் ஸ்ரீராமகிருஷ்ணர் | நிதானி, ஆண்டு 11 |
| 8 | பாப்பா பாப்பா கதை கேளு! - இறைவன் உறையும் இடம் | விதுஷன், ஆண்டு 7 |
| 10 | படக்கதை - நந்தவனத்து ஆண்டி | |
| 14 | கேட்டுச் சுவைத்தவை. | |
| 16 | நெஞ்சை நெகிழ வைக்கும் உண்மை | |
| 18 | இராமகிருஷ்ண குடும்பம் - சுவாமி அத்வைதானந்தர் | |
| 20 | இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை - ஒரு நோக்கு | |
| 22 | செய்திகள் | |
| 24 | சுவாமிஜியின் திருமுகம். | |




## இதழாசிரியர்களிடமிருந்து.

திரிமூர்த்திகளின் திருவருளால் அறநெறி அமுதமானது தனது நான்காவது ஆண்டில் காலடி வைக்கும் இவ்வேளையில், வாசகர்களாகிய உங்களை தொடர்ந்தும் எம்மோடு கைகோர்த்துச் செல்ல அழைக்கிறோம்.

இவ்வாண்டின் முதல் துளியானது குருதேவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜெயந்தி மலராகி உங்கள் தேடல்களுக்குத் துணை நிற்க வருகின்றது. சிறுவராகிய எமது குறைகளைப் பொறுத்து, உங்கள் நிறைந்த ஆதரவைத் தருமாறு வேண்டி, குருதேவரின் திருப்பாதக்கமலங்களில் இம்மலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

## நம்மிடத்தில் நம்பிக்கை !
## இறைவனிடத்தில் நம்பிக்கை !

தும்பி கூட துணிந்து எழுந்து
எம்பி எம்பி எழும் உயரம்!
தம்பி நீயும் பார்த்துக் கொண்டு
தடை தாண்டிக் களம் புரளு!



குடை வேண்டாம் மழை படட்டும்
மனம் சிலிர்க்கும் மகிழ்ச்சி பொங்கும்
கனமான கல்லெல்லாம் சிலையாக நிமிர்ந்ததையா
திடமான மனமெல்லாம் சுடராக ஒளிர்ந்ததையா

தம்பி நீயும் நிமிர்ந்து நின்று
நம்பிக்கையுடன் சிலிர்த்தெழுந்து
சிங்கம் போல், போன வழி திரும்பாது
போகும் இலக்கை அடைந்திடடா



எம் கையே எமக்கு உதவி
நம்பி(க்)கையே நாற்புறமும் கொண்டு
தும்பிக்கையான் துணையுங் கொண்டு
அம்புவியில் உயர்ந்திடடா!

சேவை செய், அன்பாய் இரு, தானம் செய், மனத் தூய்மையுடனிரு, தியானம் செய், வாழ்க்கை உன்னை எல்லையற்ற ஆனந்தத்திற்கு அழைத்துச் செல்லும்.

- சுவாமி சிவானந்தர்

# நாமும் பயில்வோம்

## வஜ்ராசனம்



1) நேராக காலை நீட்டி உட்காரவும். வலது காலை மடக்கிக் குதிக்காலை வலது புட்டத்தின் அடியில் வைத்துக் கொள்ளவும்.



2) இடது காலை இடது புட்டத்தின் அடியில் வைத்துக் கொள்ளவும். இரண்டு முழங்கால் மூட்டுக்களையும் ஒன்றாக இணைத்துக் கொள்ளவும். நன்றாக நிமிர்ந்து உட்காரவும். உள்ளங்கைகளை தொடையின் மேல் வைத்துக் கொள்ளவும். கண்களை மூடித் தியானம் செய்யவும்.




பின் பழைய இடத்திற்கு வரவும்.

**பலன்கள்:**

தியானம் செய்வதற்கு வசதியாக நீண்ட நேரம் உட்கார உதவுகிறது. உறுதியான முழங்கால் மூட்டுக்களை உருவாக்கிறது. கணுக்கால்களை உறுதியாக்குகிறது. இருதயத்திற்கு இரத்தத்தை கொண்டு செல்லும்.

## சுப்த வஜ்ராசனம்

1) நேராக காலை நீட்டி உட்காரவும். வலது காலை மடக்கி குதிக்காலை வலது புட்டத்தின் அடியில் வைத்துக் கொள்ளவும்.




1, 7



2, 6


2) இடது காலை இடது புட்டத்தின் அடியில் வைத்துக் கொள்ளவும். இரண்டு முழங்கால் மூட்டுக்களையும் ஒன்றாக இணைத்துக் கொள்ளவும். நன்றாக நிமிர்ந்து உட்காரவும்.

3) பின்புறமாக மெதுவாகச் சாயவும். கைகளால் பாதங்களைப் பிடித்த வண்ணம் முழங்கைகளால் உடலைத் தாங்கிக் கொண்டு படுக்கவும்.



3, 5


4) மல்லாந்து தட்டையாகப் படுக்கவும். தலைக்குத் தாங்கலாக இரண்டு கைகளையும் மடித்து வைத்துக் கொள்ளவும். இரண்டு முழங்கால் மூட்டுக்களையும் ஒன்றாக இணைத்துக் கொள்ளவும். அவைகள் தரையில் பதிந்தவாறு இருக்கட்டும்.



4

சிறிது நேரத்தின் பின் ஆரம்ப நிலைக்கு வரவும்.


பலன்கள்





உடலின் கீழ் உள்ள பல நரம்புகள் புட்டங்களின் வழியாக கால், தொடையின் பின்பாகமாகப் போகின்றன. இந்த நரம்புகளை இவ்வாசனம் சுறுசுறுப்படையச் செய்கிறது. இடுப்புப் பகுதி நன்றாக இயங்க உதவுகிறது. கணுக்கால், கீழ் முதுகு இவற்றை நன்றாக இயங்கச் செய்கின்றது.

பஸ்சிமதானாசனம்

1) நேராக நிமிர்ந்து உட்காரவும். இரண்டு கைகளையும் உயர்த்தித் தரைக்கு இணையாக நேர்கோட்டில் வைக்கவும்.





2) கைகளை மேல் நோக்கி உயர்த்தவும். கைகள் காதைத் தொட்டபடியும், உள்ளங்கைகள் முன்னே பார்த்தவாறும் இருக்கட்டும்.




3) இடுப்பிலிருந்து முழு உடலையும் நன்றாக முன்புறம் வளைக்கவும். உடலையும் கைகளையும் தரைக்கு இணையாக நீட்டவும்.




4) முழங்கால் மூட்டுக்கள் வளையா வண்ணம், உடல் தொடைகள் மேல் நன்றாக நீட்டிப் படியட்டும். முகம் முழங்கால் மூட்டுக்களின் மேல் பதியும் வண்ணம் முன்னே குனியவும்.




சிறிது நேரத்தின் பின் ஆரம்ப நிலைக்கு வரவும்.




பலன்கள்

முதுகெலும்பை அடுத்த நரம்புகளை இந்த ஆசனம் ஊக்குவிக்கிறது. இரப்பையில் உணவை செரிக்கும் உஷ்ணத்தைத் தூண்டுகிறது. தொந்தியைக் குறைக்கிறது. குடலைச் சேர்ந்த பகுதிகள் அனைத்தையும் ஊக்கமடையச் செய்கிறது.

வயிற்றுப்போக்கைத் தடுக்கிறது. பொதுவாக முதுகு எலும்பின் கீழே உறங்கியிருக்கும் ஆன்மீக சக்தியை எழுப்ப உதவுகிறது.

---

உங்களுடைய நரம்புகளுக்கு முறுக்கேற்றுங்கள். நமக்குத் தேவை, இரும்பைப் போன்ற தசைகளும், எஃகைப் போன்ற நரம்புகளும்தான், சுய வலிமை பெற்ற மனிதர்களாக எழுந்து நில்லுங்கள்.

– சுவாமி விவேகானந்தர்

## ஸர்வதர்ம ஸ்தாபகர் ஸ்ரீராமகிருஷ்ணர்

-ஏனைய சமயங்களிலும் உள்ள அவதாரங்களுடனான ஒப்பீடு-

கடவுள் மனிதனாக அவதரித்து வருகின்றாரா? என்ற கேள்விக்கு உலகிலுள்ள மதங்களெல்லாம் விதவிதமான விடைகளை அளிக்கின்றன. சமுதாயத்தை நல்வழியில் நடத்துவதற்கு எப்போதெல்லாம் தேவை ஏற்படுகிறதோ அத்தகைய நெருக்கடிகளில் எல்லாம் இறைவன் தன் உயர்ந்த நித்திய ஜீவன்களை உள்ளடக்கிய கூட்டத்தோடு அவதாரமாக உலகில் திரும்பத் திரும்ப வருவதுண்டு. இது இந்து மதத்தின் கோட்பாடு.

இதற்கிணங்கவே அவதார புருஷர்கள் யுகம் தோறும் வெவ்வேறு இனங்களில் வெவ்வேறு சமய மக்களிடையே தோன்றி அவர்களைப் பேரின்ப நிலையான முக்திப்பேற்றின்பால் இட்டுச் செல்கின்றனர்.

நோயாளி ஒருவன் எந்த நாட்டிலே என்ன முறையிலே ஆயத்தப்படுத்திய மருந்தை வேண்டுமானாலும் அருந்தலாம். நல்ல மருத்துவர்கள் அதற்குத் தடை சொல்ல மாட்டார்கள். நோயாளிக்கும் அப்படிச் செய்வதே மிகவும் பொருத்தமானது. நல்ல கனி எந்த நாட்டிலே, எந்த மண்ணிலே வேண்டுமானாலும் உண்டானதாக இருக்கலாம். சுவை நிறைந்திருந்து உடல் வளர்ச்சிக்குப் பயன்படுகின்ற கனி எங்கிருந்து வந்தால் என்ன? அது உற்பத்தியான நாட்டையோ மக்களையோ முன்னிட்டு அதைப் புறக்கணிப்பது பொருந்தாது. ஆத்ம சாதன வகைகளை அருமருந்தோடும் சுவை நிறைந்த கனியோடும் ஒப்பிடலாம். அவை விளைவிக்கும் நலனையே கருத்தில் வாங்கி அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஒவ்வொரு உயிரும் தன் கர்ம வினைப்பயனிற்கு ஏற்ப இந்த உலகில் வந்து அவதரிக்கின்றது. இது நம் எல்லோருக்கும் தெரிந்த உண்மை. இப்படி வந்தவர்கள்தான் நாங்கள் எல்லோரும். அப்படியானால் இப்போது நம் மனதில் ஒரு வினா எழுகிறதல்லவா? வினையில் வசப்படாத பரமபுருஷர் ஒருவர் எந்த வினையால் தூண்டப் பெற்றுப் பிறப்பெடுக்கிறார் என்பதுதான் அந்தக் கேள்வி. அவதார புருஷர்களிற்குச் சொந்த வினையில்லை. சமுதாயத்தின் வினைத்தொகுதியை அவர்கள் ஏற்றுக் கொள்கிறார்கள்.

இந்த வழியிலே முதலில் இந்த உலகிலே இறைவனால் மேற்கொள்ளப்பட்ட அவதாரங்களின் வரிசையில் ராமகிருஷ்ண பரமஹம்சர், இயேசுநாதர் ஆகிய இரு அவதாரங்களும் ஒன்றே என்று கூறும் வகையிலே இந்த இரு அவதாரங்களிலும் உள்ள ஒற்றுமைகளைப் பற்றி நாம் பார்போம்.

இவ்விருவருமே இறைவனின் அவதாரங்கள் என்று நாம் ஏற்கனவே

அறிந்திருக்கின்றோம். ஏனெனில் இவர்கள் பிறப்பதற்கு முன்னர் இவர்கள் இறைவனின் அவதாரங்கள் தான் என்பதை உணர்த்தும் வகையிலே இவர்களது பெற்றோர்களிற்குப் பல அறிவித்தல்கள் வந்தன.



இயேசு நாதரின் பிறப்பிற்கு முன்னர் இயேசுநாதரின் தாயாரான மேரி அம்மாளுக்கு வானத்திலிருந்து தேவதைகள் தோன்றி இயேசுநாதரின் பிறப்பைப் பற்றி அறிவித்தனர்.

இதைப் போலவே பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் பிறப்பிற்கு முன்னரும் அவரது தந்தையார் சுதிராம் சட்டர்ஜியின் கனவிலே பஞ்சாயுதங்கள் தரித்த திருமால் தோன்றி, "உன் குழந்தையாக நான் தோன்றுவேன்" என்று கூறினார். இதைப் போலவே ஸ்ரீராமகிருஷ்ணரின் தாயாகிய சந்திரமணி தேவியாரும் பிறக்கப் போகும் குழந்தை தெய்வீகக் குழந்தைதான் என்று உணர்ந்து கொள்ளும் வகையிலே அனுபவங்களைப் பெற்றார். ஆக பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரும் இயேசுநாதரும் இறைவனின் அவதாரங்கள்தான் என்பது உறுதியாகிவிட்டது.



அடுத்ததாக இந்த அவதார புருஷர்கள் பிறந்த இடங்களைப் பற்றிப் பார்ப்போம். இயேசுநாதர் மாடுகளையும் குதிரைகளையும் கட்டி வைக்கின்ற ஒரு தொழுவத்திலே வைக்கோல்களிடையே தோன்றினார். இதைப் போலவே ஸ்ரீராமகிருஷ்ணரும் நெல் குற்றுகின்ற இடத்திலே பிறந்தார்.

இங்கு நாம் ஒரு விடயத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவதார புருஷர்களில் அநேகமானவர்கள் உயர்ந்த செல்வந்த குடும்பத்தில் சென்று குழந்தைகளாகப் பிறக்கவில்லை.

இயேசுநாதரின் தந்தையார் யோசப் ஒரு சாதாரண தச்சுத் தொழிலாளி, அவ்வாறே ஸ்ரீராமகிருஷ்ணரின் பிறப்பின் போது அவரது தந்தையின் நிலையும் படுமோசமாக இருந்தது. அவர் ஏற்கனவே வைத்திருந்த நிலங்களையும் வீட்டையும் கூட இழந்திருந்தார்.

ஆனால் ஒரு ஒற்றுமை பாருங்கள், இந்த இரு வீடுகளிலும் பக்தி எனும் பெருஞ்செல்வம் குறைவின்றி நிறைந்து வழிந்து கொண்டிருந்தது. இங்கு நமக்கொரு உண்மை புலப்படுகிறதல்லவா? மனிதன் திரைகடல் ஓடித் தேடித்தேடிச் சேர்க்கும் செல்வம் அந்த ஒப்பற்ற இறைவன் முன்னிலையில் செல்லாக் காசாய்ப் போய்விட இறைவனை எண்ணிக் கசிந்து உருகக்கூடிய பக்தியானது பெறுமதி வாய்ந்த பொருளாக அல்லவா மாறிவிடுகிறது.

(தொடரும்...)



# பாப்பா பாப்பா கதை கேளு!

## இறைவன் உறையும் இடம்

ஒரு ஊரிலே ஒரு சிறுவன் வாழ்ந்து வந்தான். அவன் சிறந்த குண நலன்களை உடையவன். இருப்பினும் அவனது மனதில் ஒரு குழப்பம். இறைவன் என்பவர் இருக்கின்றாரா? அப்படியானால் எங்கே இருக்கின்றார்? அவரை நான் காணமுடியாதா? என்று தனக்குள்ளேயே யோசித்தான். இதைத் தீர்க்க சரியானவர் குருநாதர் என்று தீர்மானித்தான். அத்துடன் மட்டுமல்ல அவர் ஒரு பெரிய ஞானியும் ஆவார். அவன் அந்த நாளே குருநாதர் இருக்கும் இடத்துக்குச் சென்றான். அவரை வணங்கித் தனது சந்தேகத்தைக் கூறினான். குருநாதரிடம் தனது சந்தேகத்தைத் தீர்க்குமாறு கூறினான். அதற்கு குருநாதர் சிரித்துக் கொண்டு "இறைவன் உனக்குள்ளேயே இருக்கிறார், ஆனால் உன் மனம் அவரிடம் இல்லை" என்றார். அதைக் கேட்டு ஆச்சரியமாக "அப்படி என்றால் அவரை என்னால் காண முடியவில்லையே ஏன்" என்று கேட்டான். குருநாதர் சிரித்தவாறு, "ஹரித்துவார் என்னும் இடத்தில் உள்ள கங்கைக்குச் செல் அங்கு ஒரு அபூர்வமான மீன் உள்ளது. அதனிடம் சென்று கேட்டால் அது உனது சந்தேகத்தைத் தீர்த்து வைக்கும்" எனக்கூறி அந்த மீனின் அடையாளத்தைக் கூறி அவனை அங்கு செல்லுமாறு பணித்தார். அவன் அடுத்த நாளே அங்கு சென்றான்.

கங்கையின் கரையில் நின்றவாறு குருநாதர் கூறிய மீன் வருகிறதா எனப் பார்த்துக் கொண்டிருந்தான். இவ்வாறு சில நாட்கள் ஆகிய பின் ஒரு நாள் குருநாதர் கூறியது போன்ற அடையாளங்களை உடைய மீன் வெளியே வந்தது. அவன் அதைப் பார்த்து, "அழகிய மீனே, கடவுள் எங்கே இருக்கின்றார்?, எவ்வாறு அவரை நான் பார்க்க முடியும் என்று எனக்குக் கூறுவாயா?" என்று தனது கேள்வியைக் கேட்டான்.

அப்போது அந்த மீன் "எனக்கு இப்போது தாகமாக இருக்கிறது நீ எனக்குத் தண்ணீர் கொண்டு வந்து தந்தால் நான் உன் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பேன்" என்று கூறியது. அப்போது அவன் சிரித்துக் கொண்டே "உனக்கு வலப் பக்கத்திலும் இடப் பக்கத்திலும் உனக்கு முன்னாலும் பின்னாலும்

உன் உள்ளேயும், அப்பாலும் தண்ணீர் நிறைய இருக்கையிலே நீ நீரைக் கேட்கிறாயே" என்றான்.



உடனே அந்த மீன் "அதே போலத்தான் நீ தேடும் இறைவனும் உனக்கு வலப் பக்கத்திலும் இடப் பக்கத்திலும் உனக்கு முன்னாலும் பின்னாலும் உன் உள்ளேயும் , அப்பாலும் இருக்கிறான்" என்றது.


சற்றுத் திருப்தியுடன் சீடன் மீனை நோக்கி, "நீ கூறுவது போல இறைவன் இருக்கிறான் என்பதை நான் நம்புகிறேன். அப்படி என்றால் ஏன் என்னால் அவரைக் காண முடியவில்லை" என்று கேட்டான். அந்த மீனும் பதிலுக்கு "என்னைச் சூழ நீர் இருப்பினும் என்னால் தாகத்தைத் தணிக்க முடியவில்லையே" என்று கூறியது. அதற்கு அவன் "நீ சிறிது நீரின் உள்நோக்கி திரும்பினால் நீர் உனது வாயிற்கு எட்டும். அப்போது நீ நீரைக் குடிக்கலாமே" என்று கூறினான். உடனே அந்த மீன், "அதைப் போலவே நீயும் உள்நோக்கித் திரும்பினால் இறைவனைக் காணலாம். அதாவது உலக ஆசைகளில் ஈடுபட்டிருக்கும் சிந்தனைகளை உள்ளிருக்கும் இறைவனை நோக்கித் திருப்பினால் உன் கவலைகளுக்கு முடிவு வரும்" என்றது. அவனுக்கு அப்போது தான் புரிந்தது எனக்குள்ளேயே இறைவன் இருக்கிறார் . அதை அறியாமலேயே இருந்துவிட்டேன் என்று மனம் வருந்தினான்.

மீண்டும் கிராமத்திற்குச் சென்று குருநாதரைச் சந்தித்து அவரை வணங்கி தான் இப்போதுதான் இறைவன் எல்லா இடத்திலும் , எனது உள்ளத்திலும் கூட நிறைந்து இருக்கிறான் என்று உணர்ந்துவிட்டதாக மகிழ்ச்சியுடன் கூறினான் . இவ்வாறே நாமும் இறைவன் எமக்குள்ளேயே இருக்கிறான் என்பதை அறியாதவர்களாக இருக்கிறோம்.

இறைவன் எங்கும் உள்ளவர், எங்கும் நிறைந்தவர், எல்லாம் அறிபவர் என்பதை மனதில் தெளிவாக உணர்ந்து பக்தி செலுத்தி வாழ்வோமாக. இறைவனின் அம்சமாக விளங்கும் அனைத்து உயிர்களிடத்தும் அன்பு காட்டுவோமாக.


> அனைத்து உயிர் மீதும் அன்பாய் இருத்தலே உண்மை மதமாகும். வாழும் உயிர்களிடத்தெல்லாம் அளவிலா அன்பு நெஞ்சத்துப் பூணுக.
> - புத்த பகவான்

# நந்தவனத்து ஆண்டி


1
ஒரு கிராமத்தில் சிவன் என்ற பிச்சைக்காரன் வசித்து வந்தான். அவன் அங்குள்ள கோயிலருகிலுள்ள மரத்தடியிலிருந்து தினமும் பிச்சை எடுத்தே சீவித்தான்.
2
ஒரு நாள் அவ்வழியே வந்த இருவர் அவனது சோம்பேறித்தனத்தைக் கண்டு ஏசினர்.
ஏய், தினமும் பிச்சை எடுத்து உண்கிறாயே வெட்கமில்லையா ஏதாவது ஊருக்குப் பயனுள்ளதாக உழைத்தால்தான் இனி உனக்குப் பிச்சை போடுவோம்
3
அவர்கள் கூறியது போல் தானும் ஏதாவது நல்ல காரியம் செய்ய வேண்டும் என்று சிந்தித்தான்.
ஆமா, அவர்கள் சொன்னபடி என்ன நல்ல காரியம் செய்யலாம்... ஆம்... இந்தக் கோயிலருகே நந்தவனம் அமைத்து ஆலயத்திற்குத் தொண்டு செய்யலாம்
4
அவ்வாறே கோயிலருகே சிறு பூஞ்செடிகளை நட்டு நந்தவனம் அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டான்.
ஆமா, இந்தப் பூஞ்செடிகளை நீர் ஊற்றிப் பராமரிக்க ஒரு பெரிய பானை இல்லையே... சிவசாமியிடம் கேட்டுப் பார்ப்போம்


5 மறுநாள் சீவன் குயவனான சிவசாமியிடம் சென்றான்
ஐயா நான் ஒரு நந்தவனம் அமைக்கிறேன் அதற்கு நீர் ஊற்ற ஒரு பெரிய பானை தந்தால் உதவியாக இருக்கும்.
6 அதற்கு குயவன்
என்னிடம் இப்போது பெரிய பானை இல்லை. ஆறு மாதத்தின் பின் வா செய்து தருகிறேன்
7 காலம் கடந்தது சீவன் மீண்டும் சிவசாமியை நாடினான்.
ஐயா உங்களிடம் ஒரு பானை கேட்டிருந்தேனே
ஓ... அதுவா இன்னும் நான்கு மாதத்தின் பின் வா முடித்துத் தருகிறேன்
8 சலித்தபடி இருப்பிடம் திரும்பினான் சீவன்
ம்... நல்ல சேவை செய்யவும் நல்ல காலம் வர வேணும். உடனே செய்ய முடிய வில்லையே...


9
மீண்டும் நான்கு மாதங்களின் பின் குயவனை நாடி வந்தான் சீவன்.
ஐயா பத்து மாதங்கள் ஆகின்றன. நான் கேட்டிருந்த பானையைப் பெற்றுக் கொள்ளலாமா
10
சிவசாமியும் அவனுக்கெனச் செய்த பானையை அவனிடம் கொடுத்தான்
இதோ நீ கேட்ட பானை எடுத்துச் செல். கவனமாக பாவித்து உன் பணியைச் செய்
நன்றி ஐயா
11
மகிழ்ச்சியுடன் அதைப் பெற்றவாறு இருப்பிடம் நோக்கி நடந்தான் சீவன்
ஆகா இனிமேல் கவலையேயில்லை நானும் உழைத்து உண்டு வாழலாம்
12
சந்தோச மிகுதியில் தலையில் பானையை வைத்தபடி நளினமாக பாடி ஆடத் தொடங்கினான்.
நல்ல குடம் நல்ல குடம் எனக்கு வந்ததே எல்லையில்லா இன்பம் கொண்டு வந்ததே







15

இதையே சித்தர் ஒருவர் பின்வரும் பாடலில் கூறுகின்றார்

நந்தவ னத்திலோர் ஆண்டி - அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டிக்
கொண்டு வந்தானொரு தோண்டி - அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி

இவ்வாறே நாமும் குயவனாகிய இறைவனிடமிருந்து பெற்ற உடலைக் கொண்டு நற்செயல்களைச் செய்யாது அதனைப் வீண் கேளிக்கைகளிலும், பயனற்ற செயல்களிலும் காலத்தைக் கழிக்கின்றோம். வாழ்க்கை முடிவடையும் வேளையில் வருந்தாமல் இப்பொழுதிருந்தே நற்கருமங்கள் செய்து வாழ்வைப் பயனுடையதாக்குவோம்.

## கேட்டுச் சுவைத்தவை

28.09.2003 அன்று இராமகிருஷ்ண மிஷன் அறநெறிப்பாடசாலை மாணவர்களுக்காக இந்தியாவில் இருந்து வருகை தந்திருந்த சுவாமி போதமயானந்தா அவர்கள் ஆற்றிய அருளுரையில் இருந்து தொகுக்கப்பட்டது.

ஆளுமை என்றால் 'Always be bright' அவர்கள் எங்கே இருந்தாலும் வித்தியாசமானவர்களாக, சிறப்பாக விளங்குவார்கள். மற்றவர்களில் இருந்து வேறுபட்ட சிந்தனை, உயர்ந்த சிந்தனை, பண்பு செயற்றிறன் கொண்டவர்கள் இவர்கள். புத்த பகவான் மனதில் மூப்பு, பிணி, சாக்காடு கண்டு ஏன் என்ற கேள்வி உதித்தது. சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண பரமஹம்சரிடம் இறைவனைக் கண்டதுண்டா? எனக்கும் காட்ட முடியுமா? என்று வினவினார். இவ்வாறு இவர்களது எண்ணங்கள் சாதாரணமானவர்களில் இருந்து வேறுபட்டதாகவும் உயர்ந்ததாகவும் இருந்தது.



ஒரே வயதை உடைய ஒவ்வொருவரும் 5 கிலோகிராம் தூக்குவதற்கு முடியும். அவர்கள் வளரும் போது அது அதிகமாகும். இதற்குச் சக்தி உடலுக்கு மிக முக்கியம். மனதினால் வேலை செய்யப்படுகிறது எனினும் அதற்கு உடல், புத்தி தேவை. இவை சேர்ந்தால் ஆனந்தம் கிடைக்கும். தைத்திரிய உபநிடதம் ஐந்து ஆளுமையின் பிரிவுகளைக் கூறுகின்றது.

அவை உடல், சக்தி, மனம், புத்தி, ஆனந்தம் என்பனவாகும்.

உடல், சக்தி, மனம் இவற்றை புத்தியினால் சரியாக இயக்க முடிந்தால் ஆனந்தம் கிடைக்கிறது. அதுவே உண்மையான ஆளுமை ஆகும். எல்லாமே எமக்குள்ளேதான் இருக்கிறது. நாம் அதை வெளியில் தேடுகிறோம். அதை எம்முள்ளிருந்து கண்டு வெளிக் கொணர்வோமானால் அதுவே சிறந்த ஆளுமை ஆகின்றது.

அப்படிப்பட்டவர்கள் எப்போதும் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் உள்ள போது எப்போதும் மகிழ்ச்சியாக இருப்பார். அவருடன் வாழ்ந்தவர்கள் அவரிடம் எப்போது நீங்கள் கடுமையாக இருப்பீர்கள் எனக் கேட்டனர். அதற்கு சுவாமி விவேகானந்தர் பகிடியாக வயிற்று வலி வரும்போது என்றார்.

அமெரிக்காவில் அவர் பேசும் போது உங்களை ஒரு போதும் பாவி என்று கூறாதீர்கள். நீங்கள் 'அழியாத பேரானந்தத்தின் புத்திரர்' என்று கூறுகின்றார். இதை உணர்ந்து கொள்வதால் வலிமை வரும், எல்லாவித ஆற்றல்களும் வெளி வரும் என்றார். உடல், உள்ளம், புத்தி என்பன வலிமை பெறும். அப்போது ஆனந்தம் நிலைத்து நிற்கும்.

இறைவன் மனிதனுக்கு ஆனந்தத்தை சிறந்த கொடையாக ஆனால் இலகுவில் அதை அவன் உணர்ந்திடாத வகையில் வழங்க விரும்பினார். தேவர்கள் "மனிதர்கள்

கண்டறிந்திடாத வகையில் அதை வானத்தில் வையுங்கள்" என்று ஆலோசனை கூறினர். அதற்கு அவர், "மனிதர்கள் அதை சுலபமாகக் கண்டுபிடித்து விடுவார்கள்" என்றார். பின் தேவர்கள், "கடலினுள் வையுங்கள்" என்றனர். அப்போதும் கடவுள், "அதையும் அவர்கள் சுலபமாகக் கண்டுபிடித்து விடுவார்கள்" என்றார். இறுதியில் இறைவன், மனிதனுள்ளேயே அந்த ஆனந்தப் பொருளை வைத்தார். ஆனந்தப் பொருள் உள்ளேயே இருக்கிறது, உள்ளே தேடுபவன் கண்டுகொள்கிறான்.

எமக்கும் ஆனந்தத்தை அடைய ஆசைதான், ஆனால் ஞானியர் கூறிய வழிமுறைகளைக் கடைப்பிடிக்க நேரமில்லையே என்று நாம் அலுத்துக் கொள்கின்றோம். உண்மையில் ஞானிக்கும், அஞ்ஞானிக்கும் இருப்பது ஒரு நாளில் 24 மணித்தியாலங்கள்தான். எப்படி நேரத்தை முகாமைத்துவம் செய்வது? எதற்கு முக்கியத்துவம் கொடுப்பது? எப்போது கொடுப்பது? என்ற திட்டம் ஞானியிடம் உண்டு. தியானம், உடற்பயிற்சி. வீட்டு வேலை போன்றவை முக்கியமும் உடன் தேவையுமானவை. நேரத்தை எப்படி சரியாக ஒதுக்குவது என்பதை திட்டமிடக் கீழுள்ள அட்டவணை உதவுகிறது.

**Time Management Chart**

| | |
|---|---|
| Important<br>Urgent | Important<br>Not Urgent |
| Not Important<br>Not Urgent | Not Important<br>Urgent |

ஒரு கடையிலுள்ள வியாபாரி தன் கடையிலுள்ள பொருள்களை விற்பனை செய்யும்போது ஒவ்வொன்றைப்பற்றியும் இப்படிப்பட்டது எனப் புகழ்ந்து கூறி விற்பனை செய்வார். உப்பைப் பற்றி எதுவும் கூறமாட்டார். ஒருமுறை சிறிய உப்புக்கற்கள் தம்மில் பெரிய உப்புக்கல்லிடம், "ஏன் வியாபாரி எம்மைப் பற்றி எதுவும் புகழ்ந்து கூறுவதில்லை" என்று கேட்டது. அதற்குப் பெரிய உப்புக்கல், "எல்லா உணவுப் பதார்த்தங்களுக்கும் எங்களைப் போடவேண்டும் அதனால் மக்கள், எம்மை எப்படியும் வாங்குவார்கள் என்று வியாபாரிக்குத் தெரியும். நாம் தான் முக்கியமானவர்கள்" என்று கூறியது. சிறிய கற்களுக்கு அது திருப்தி அளிக்கவில்லை. பெரிய உப்புக்கல், "எமது அக்கா யார் தெரியுமா? செல்வத்தை நல்கும் மகாலட்சுமியே" என்று கூறியது. சிறிய கற்கள் பெரும் ஆச்சரியத்துடன், "எவ்வாறு அது சாத்தியம்?" என்றன. அதற்குப் பெரிய உப்புக்கல், "நமது அம்மாவும் அப்பாவும் கடல். கடலிலிருந்தே நாம் பிறந்தோம் அதேபோல் பாற்கடலைக் கடைந்த போது சமுத்திர ராஜனின் மகளாக மகாலட்சுமி தோன்றினார் அதனால் அவர் எமக்கு அக்கா" என்றதும் சிறிய கற்களுக்கு மிக்க மகிழ்ச்சி. யாவும் வந்தன. அவை துள்ளி துள்ளிச் சென்று கடலை அடைந்து அதோடு ஒன்றாகக் கலந்தன. இதேபோல் நாமும் எம் உண்மை இயல்பை, எல்லையற்ற தன்மையை அறிந்தால் ஆனந்தமாகவும் உறுதியுடனும் வலிமையுடனும் வாழலாம். அமிர்தஸ்ய புத்திரர்கள் நாம் அந்த உண்மையை மனதில் கொண்டு வாழ்வோம்.

# நெஞ்சை நெகிழ வைக்கும் உண்மை

"நான் பல பேச்சுக்களை நிகழ்த்துவதன் மூலம் இளைஞர் மத்தியில் ஏற்படுத்தக் கூடிய உத்வேகத்தை இவன் தன் ஒரே வரிப்பாடல் மூலம் ஏற்படுத்திவிடுவான்" என்று மகாத்மா காந்தியினாலேயே போற்றப்பட்டவர் ஓம்கார்நாத் தாகூர் என்ற இசை மேதை. ஆம் உண்மைதான், இன்று இந்தியர்கள் மட்டும் அல்லாமல் அனைத்து உலகத்தவராலும் மெச்சப்படும் இன்றைய இந்திய தேசிய கீதத்திற்கு இசை தந்தவர் தான் ஓம்கார்நாத் தாகூர். ஆங்கிலேய ஆட்சியிலே இத்தாலி, ஹொலண்ட், சுவிஸ்லண்ட், ஜேர்மனி முதலிய இடங்களில் நடைபெற்ற இசை நிகழ்ச்சிகளுக்கு இந்திய இசையின் ஏகப் பிரதிநிதியாகச் சென்று கலந்தவர் என்ற பெருமைக்கும் உரியவர்.




கலைப் பட்டப்படிப்பிற்குப் பெயர் போன காசி இந்து பல்கலைக் கழகத்தின் முதலாவது தலைமைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். இப்படிப்பட்ட தலைசிறந்த இசை மேதையின் வாழ்க்கையில் நடந்த சம்பவம் ஒன்று இம்முறை நம்மலரிற்கு நறுமணம் சேர்க்கிறது.

மேற்குறிப்பிட்ட அத்தனை தகைமைகளையும் பெருமையையும் உடையவராக ஓம்கார்நாத் இருந்தாலும் அவரது பணிவே அவற்றிற்கெல்லாம் சிகரமாக அமைந்திருந்தது. ஓம்கார்நாத் தாகூர், தான் தினமும் சென்று வரும் பாதையில் பார்வையற்ற, ஊனமுற்ற ஒரு பிச்சைக்காரனைப் பார்ப்பதுண்டு. பார்வை இல்லாவிட்டாலும் மிக அழகாக ஸ்ரீ ராமபிரானின் பாடல்களைப் பக்தியோடு மெய் உருகிப்பாடுவான். அவனுக்குப் பக்கவாத்தியமாக ஒரு இளைஞன் "டில்ரூபா" என்ற இசைக்கருவியை இசைப்பதுண்டு. பாடுபவனின் பக்தி கலந்த இசையும் டில்ரூபா நாதமும் கேட்போர் அனைவரையும் பரவசப்படுத்தி மெய்மறக்கச்

செய்யும். தினந்தோறும் ஓம்கார்நாத் தாகூரும் கூட அந்தப் பிச்சைக்காரனின் பக்தி கீதங்களைக் கேட்டு மெய் உருகி நிற்பார். அவனது பாடல்களைக் கேட்டவாறே கண்ணீர் மல்க ஸ்ரீ ராமபிரானின் திருவுருவத்திலே லயித்து நிற்பார். இப்படியே சில காலம் கழிந்தது. ஒரு நாள் மாலை ஓம்கார்நாத் வரும் வேளையில் பிச்சைக்காரன் தனியாக உட்கார்ந்திருப்பதையும், டில்ரூபா பக்கவாத்தியம் இல்லாததால் அன்று பாட்டு பாடாமல் இருப்பதையும் கண்டார்.

பிச்சைக்காரனை அணுகி, இன்று தான் இந்த பக்தி கீதங்களைக் கேட்க முடியாதா என்று மனமுருகிக் கேட்டார். அதற்கு அந்தப் பிச்சைக்காரனும் இன்று பக்கவாத்தியம் வாசிக்கும் மற்றையவனுக்கு உடல்நலம் சரியில்லை என்றும், அதனால் தன்னால் பாட முடியவில்லை என்றும், இன்று பிச்சை மிகக் குறைவே என்றும் குறைபட்டான். உடனே தாகூரும், அப்படியானால் தான் டில்ரூபா வாசித்தால் பிச்சைக்காரன் பாடுவானா என்று கேட்டு, டில்ரூபாவை மீட்டத் தொடங்கினார். பிச்சைக்காரனும் மெய்மறந்து பக்தி பெருக பல மணி நேரம் ஸ்ரீ ராமனை நினைத்துக் கீர்த்தனைகள் பாடினான். பாடல் முடிந்தது. தாகூர் பிச்சைக்காரனிடம் விடைபெற்றுக் கொண்டு புறப்படும் வேளையில் பிச்சைக்காரன் "தாங்கள் யார், அருமையாக டில்ரூபா வாசித்தீர்களே" என்று கேட்டான். மிகப் பணிவாக "ஏதோ என்னால் முடிந்ததை உங்கள் ராமநாம சங்கீர்த்தனத்திற்குச் செய்தேன்" என்றார். அவர் யார் என்று பிச்சைகாரன் வற்புறுத்திக் கேட்க, மிகவும் பணிவாக, "என்னை 'ஓம்கார்நாத்' என்பர்" என்று கூறி விட்டுச் சென்றுவிட்டார்.

ஆகா! எத்தனை எளிமை, பணிவு, இசையின் சக்கரவர்த்தி ஓர் பிச்சைக்காரனிற்கு பக்க வாத்தியம் வாசிப்பது என்பது நினைத்துப் பார்க்கக் கூடிய ஒன்றா என்ன? ஆனால் ஓம்காரநாதரோ ஸ்ரீ ராமபிரானின் சேவையாகக் கருதித் தன்னை முழுமையாக ஒடுக்கிக் கொண்டு ஒரு பிச்சைக்காரனின் பாட்டிற்கு டில்ரூபா வாசித்திருக்கிறார். பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் அமுத மொழிகளில் கூறியவாறு, பள்ளத்தை நோக்கி நீர் ஓடுவது போல, பணிவை நோக்கியே அனைத்துச் சிறப்புக்களும் ஏன் இறைவனும் கூட ஓடுகிறான் என்பது நினைவிற்கு வருகிறது அல்லவா தோழர்களே!



மகிழும் பொருட்டல்ல நாம் சீவிக்க வேண்டியது. கடவுளை உணரும் பொருட்டும், மனித சேவையின் பொருட்டுமே சீவிக்க வேண்டும்.

மகாத்மா காந்தி

# இராமகிருஷ்ண குடும்பம் - சுவாமி அத்வைதானந்தர்

"மூத்த கோபால்" என்று பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரால் அன்பாக அழைக்கப்பட்ட சுவாமி அத்வைதானந்தரின் திவ்ய சரிதத்தை இவ்விதழ் ஏந்தி வருகிறது.

1828 ஆம் ஆண்டு ராஜ்பூர் என்ற ஊரில் கோபால் சந்திர கோஷ் என்ற திருநாமத்துடன் பிறந்தார். சிறுவயதிலே தந்தை, தாயை இழந்து, வயதான பின் வாழ்க்கைத் துணையை இழந்து துன்பங்களால் மனம் தளர்ந்த நிலையில் இவர் நண்பரான மகேந்திரபாலை நாடினார். குருதேவரின் பக்தரான மகேந்திரபால் இவரின் உள்ளத் துயரைத் தணிக்க இவரைக் குருதேவரிடம் அழைத்துச் சென்றார்.

தமது சீடர்களைப் பார்த்தவுடனேயே அடையாளம் கண்டு நெருங்கிப் பழகும் குருதேவர் கோபாலை அந்நியர் போலவே நடத்தினார். முதற் சந்திப்பின் போது கோபாலும் குருதேவரிடம் அசாதாரணமாக எதையும் உணர்ந்தது போல் தெரியவில்லை. இருப்பினும் நண்பரின் வேண்டுகோளிற்கு இணங்க மீண்டும் ஒரு முறை கோபால் தட்சிணேஸ்வரம் வந்தார்.

இம்முறை குருதேவர் கோபாலின் துயரத்தைத் தீர்க்க வல்ல அருமருந்தைக் கொடுத்தார். இறைவனைப் பற்றி மட்டும் பேசினார். கோபாலின் மனதிலிருந்த பற்றுக்களும் பந்தங்களும் பிடுங்கி எறியப்பட்டன. உலகத்தின் நிலையாமை பற்றி குருதேவர் கூறியவை கோபாலின் மனதில் நிலையாகப் பதிந்தன. உலக வாழ்க்கையைத் துறந்து கடவுளைத் தேடும் எண்ணத்தில் மூழ்கினார். "குருதேவர் என்னை முழுவதுமாக ஆட்கொண்டுவிட்டார். நான் அவரைப் பிரிய நேர்ந்த போதெல்லாம் துடித்தேன். எத்தனை முயன்றும் அவரது திருமுகத்தை என்னால் மறக்கவே முடியவில்லை." என்று அவரே குருதேவர் தம்மை எப்படி ஆட்கொண்டார் எனக் கூறுகின்றார்.

கோபால் குருதேவரை விட எட்டு வயது மூத்தவர். ஆனாலும் அவர் குருதேவருக்குச் சேவை செய்வதில் இளஞ்சீடர்களுக்கு நிகராக இருந்தார். அவருக்கு வீட்டு விவகாரங்களில் இருந்த நிர்வாகத் திறமையும், பிறரிடம் இனிமையாகப் பழகுகின்ற சுபாவமும் குருதேவருக்குப் பிடித்துப் போய்விட்டன. அன்னையாருக்குப் பொருட்களை வாங்குவதிலும், மற்றைய வேலைகளிலும் கோபால் உதவியாக இருந்தார்.

குருதேவரின் இறுதிக் காலத்தில் அவர் காசிப்பூரில் தங்கியிருந்த போது கோபால் அவருக்குத் தேவையான கடமைகளை முன்னின்று செய்தார். குருதேவருக்கு நேரம் தவறாமல் மருந்து கொடுப்பதும் குருதேவரின் தொண்டைப் புண்ணைத் தினமும் வேப்பஞ்சாற்று நீரினால் கழுவிச் சுத்தஞ் செய்வதும் கோபாலின் வழமையான கடமைகளாகும்.

ஒருநாள் கோபால் குருதேவருக்குச் சேவை செய்ய வேண்டிய நேரத்தில் எங்கோ அமர்ந்து தியானம் செய்து கொண்டிருந்தார். இதையறிந்த குருதேவரின் பக்தரான கிரீஷ், "கோபால் யாரைத் தியானிக்கிறாரோ அவர் இங்கே படுக்கையில்



கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார். கோபால் இவ்விறைவனை எங்கோ உட்கார்ந்து தியானித்துக் கொண்டிருக்கிறார்'' என்றார். யாரோ ஒரு பக்தர் உடனே கோபாலை அங்கு அழைத்து வந்தார். குருதேவர் கோபாலைத் தனது கால்களைப் பிடித்துவிடச் சொன்னார். பிறகு அவர் கோபாலிடம், "எனக்குக் கால் வலிக்கிறது என்றா உன்னைப் பிடித்துவிடச் சொல்கிறேன்? இல்லையப்பா, இல்லை. உன் முற்பிறவிகளில் நீ நிறையப் புண்ணியம் செய்துள்ளாய். அதனால்தான் உனது பணிவிடையை ஏற்றுக்கொள்கிறேன்'' என்றார்.

நேர்மை, அன்பு, குருதேவரிடம் சரணாகதி ஆகியவை கோபாலிடம் பரிபூரணமாக இருந்தன. பொய் பேசக் கூடாது என்று குருதேவர் ஒருநாள் ஒருவரிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்ட கோபால் அன்று முதல் விளையாட்டாகக் கூடப் பொய் பேசுவதை விட்டுவிட்டார்.

ஒருமுறை கோபால் துறவிகளுக்குத் தானம் செய்ய விரும்பி பன்னிரண்டு காவியுடைக்ளையும் ஜபமாலைகளையும் வாங்கினார். இதைக் கேள்விப்பட்ட குருதேவர் கோபாலிடம், "உன்னிடமுள்ள காவி உடைகளையும் ஜபமாலைகளையும், என் குழந்தைகளான இந்த இளஞ் சீடர்களுக்குக் கொடு. அப்படிச் செய்தால் உனக்கு ஆயிரம் மடங்கு புண்ணியம் வந்து சேரும். இவர்கள் ஒவ்வொருவரும் ஆயிரம் துறவிகளுக்குச் சமம்'' என்றார். கோபாலும் உடனே அதற்குச் சம்மதிக்க குருதேவர் அவற்றை வாங்கிச் சீடர்களுக்கு வழங்கினார். குருதேவரின் மறைவுக்குப் பின் சீடர்கள் உலகைத் துறந்து சந்நியாசிகள் ஆயினர். கோபால் சுவாமி அத்வைதானந்தர் எனும் பெயர் பெற்றார். அக்காலத்தில் சுவாமிகள் இந்தியாவிலுள்ள பல தீர்த்தத் தலங்களுக்கும் சென்று ஜப, தப சாதனைகளில் ஈடுபட்டார்.

சுவாமி விவேகானந்தரால் பேலூரில் கங்கை நதிக் கரையில் ராமகிருஷ்ண மடத்திற்கான இடம் வாங்கப்பட்டு மடம் கட்டும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன. சுவாமிகள் கட்டிடம் கட்டுவதற்கு ஏதுவான வகையில் நிலத்தைச் சீரமைக்கும் பணியில் ஈடுபட்டார். நிலத்தைச் சீரமைத்தல், கட்டிட வேலைகள் ஆகியவற்றுடன் மடத்திற்காக காய்கறித் தோட்டம், பால் பண்ணை ஆகியவற்றை அமைக்கும் முயற்சியிலும் இறங்கினார்.

1909 இன் இறுதியில் கடினமாக உழைத்த சுவாமிகளுக்கு கடுமையான வயிற்று வலி உண்டானது. கடைசிக் காலத்தில் அதனுடன் காய்ச்சலும் சேர்ந்து கொண்டது. சுவாமிகள் மகாசமாதி அடைவதற்குச் சற்று முன்னர் குருதேவர் தோளில் கதாயுதத்துடன் அவருக்குக் காட்சியளித்தார். 1909 டிசம்பர் 28 ஆந் திகதி சுவாமிகள் குருதேவரின் திருநாமத்தை ஜபித்தபடி மகாசமாதி அடைந்தார். அப்பர் சுவாமிகளைப் போன்று உழைத்து அவரைப் போலவே எண்பத்தி ஓராவது வயதில் உடலை உகுத்தார். அவருடைய உடல் பேலூர் மடத்தில் கங்கை நதிக் கரையில் தகனம் செய்யப்பட்டது.

# இராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை - ஒரு நோக்கு . . .

04-01-2004 அன்று இடம்பெற்ற எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவில், ஆசிரியை செல்வி க. இராமுப்பிள்ளை அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட பாடசாலையின் ஆண்டறிக்கையிலிருந்து தொகுக்கப்பட்டது.


## பாடசாலையின் தோற்றமும் வளர்ச்சியும்

1952 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி ஆவணி மாதத்து அட்டமி திதியாக அமைந்த கிருஷ்ண ஜெயந்தி நாளன்று அப்போதைய நாட்களில் மிஷனுக்குப் பொறுப்பாகவிருந்த ஸ்ரீமத் சுவாமி அஸங்கானந்தாஜீ மஹராஜ் அவர்களால் பதினைந்து மாணவர்களுடன் இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. காலம் செல்ல அரசாங்கப் பாடசாலைகளில் சமயம் கட்டாய பாடமாக்கப்பட்டதையடுத்து, மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து, தற்போது மாணவர்களின் தொகை எண்ணூற்றி ஐம்பதையும் விஞ்சியுள்ளது. தியாக சிந்தனையுள்ள ஐம்பதிற்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இங்கு பயன் கருதாது பணிபுரிகின்றனர்.

## பள்ளியின் நோக்கமும் செயற்பாடும்


மனதை நல்வழிப்படுத்தி, சீரிய பண்புகளை வளர்த்து, வாழ்க்கையின் விழுமியங்களை உணர்ந்து, தனிப்பட்ட வாழ்விலும் சமுதாயத்திலும் சுயநம்பிக்கையுடன் வாழ்வதே சமயத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தினைப் பூரணமாக நிறைவேற்றுவதற்கு இரண்டு காரணிகள் இன்றியமையாதனவாகின்றன.

1. பொருத்தப்பாடான சூழல் - அதாவது பக்தியும் தூய்மையும் துலங்கும் இடம்.
2. அன்பும் அறிவும் தியாக உணர்வும் கொண்ட ஆசிரியர்கள்.



இவையிரண்டுமே எமது பாடசாலைக்கு கிடைத்துள்ளன என்பதில் ஐயமில்லை. சமய அறிவு வெறும் போதனையோடு மட்டும் நின்றுவிடாது, ஈட்டிக் கொண்ட அறிவைச் சாதனை செய்யும் வழிவகையும் இங்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்த வகையில் மாணவர்களை நேரிய வழியில் நெறிப்படுத்தும் புனிதமான பணியைச் செய்ய ஆசிரியர்களுக்கு வாழ்வியல் நெறிகளை அவ்வப்போது உணர்த்தியும், செயலூக்கம் தரும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கியும், உயர் வகுப்பு மாணவர்களுக்கு ஆளுமை அபிவிருத்திக்குக் கைகொடுக்கும் சீரிய விழுமியங்களை ஏன்? எவ்வாறு?

கடைப்பிடிக்க வேண்டும்? என்பன பற்றி இன்றைய கணனி சார் மாணவர் சமுதாயம் ஏற்றுக் கொள்ளும் வகையில் மனதில் பதிய வைத்தும் உற்சாகப்படுத்தி வருகிறார்கள் எமது ஆச்சிரமத்து சுவாமிகள்.



மாணவர்கள் காலை 8.00 மணிக்கே பாடசாலைக்கு வந்து சுவாமி தரிசனம் செய்தபின் பொன்மொழிகளைப் பிரதி பண்ணிக்கொண்டு 9.00 மணிக்கு வரிசையாக வந்து பிரார்த்தனை மண்டபத்தில் அமர்வர். அங்கு தியானம், வேதமந்திரம், பஜனை, பொன்மொழிகளும் அவற்றின் விளக்கங்களும் என்பன இடம்பெறுவதுடன் பாடசாலை ஆரம்பிக்கின்றது. இவற்றைத் தொடர்ந்து இடம்பெறும் இரு பாடவேளைகளில் ஒன்றில் சமயதத்துவ விளக்கங்கள், சமய சான்றோர்களின் வாழ்க்கை வரலாறு, மற்றும் சமய அனுட்டானங்கள் என்பன அடங்கிய சமயஅறிவும், அடுத்ததில் பஞ்சபுராணம் ஓதல், பஜனை தோத்திரங்கள் என்பனவும் போதிக்கப்படும்.



மாணவர்கள் கற்றவாறு நிற்பதற்கு ஊக்கம் அளிக்கும் நோக்குடன் 'செய்யும் தொழிலே தெய்வம்' என்ற கர்மயோகத்தின் தொனிப்பொருளை உணரும் வகையில் பாடசாலை தொடங்கும் முன்பும், முடிந்தபின்பும் கைங்கரியங்கள் செய்யும் வாய்ப்பு மாணவர்களுக்கு அளிக்கப்படுகிறது. நேரம் தவறாமை, அமைதி காத்தல், தூய்மையைப் பேணல், மூத்தோரை மதித்தல் போன்ற உன்னதமான பண்புகள் மாணவர்களிடையே குறிப்பாக விளங்குவதைக் காணலாம்.



உயர் வகுப்பு மாணவ மாணவிகளிடையே தேர்ந்தெடுக்கப்பட்ட தொண்டர் குழாம் ஆசிரியர்கள் சிலரதும் மூத்த தொண்டர்களின் மேற்பார்வையில் சுவாமிஜீயின் வழிகாட்டுகையுடன் திறம்படச் செயற்பட்டு வருகிறது. இனமத பேதமின்றி ராமகிருஷ்ண மிஷனால் மாதந்தோறும் நடாத்தப்பட்டு வரும் இலவச மருத்துவ முகாமிலும் அவ்வப்போது வெளியிடங்களில் நடாத்தும் மருத்துவ முகாம், ஆளுமை அபிவிருத்திப் பயிலரங்குகள் மற்றும் ஆன்மீகக் கருத்தரங்குகள், பஜனை முதலியவற்றிலும் இத் தொண்டர் குழாம் மாணவர்களும், ஆசிரியர்கள் சிலரும் அக்கறையோடு ஆற்றிவரும் பணி குறிப்பிடத்தக்கதாகும்.



## செய்திகள்

டிசெம்பர் மாதம் 16ஆம் திகதி தூய அன்னை ஸ்ரீ சாரதாதேவியின் 150ஆவது ஆண்டு ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. காலை 5.30 முதல் மங்களாராத்தி, வேதபாராயணம், விசேட பூசை, பஜனை, ஹோமம் என்பன நடைபெற்று நண்பகல் ஆரத்தியுடனும் மாலையில் 5.00 மணி முதல் பஜனை, அருளுரை, அர்ச்சனை, ஆரத்தியுடனும் அன்னையின் ஜனனதினம் இனிதே நிறைவு பெற்றது.



டிசம்பர் 21ஆம் திகதி எமது சமய பாடசாலை மாணவர்களினால் கலைநிகழ்ச்சிகளுடன் அன்னையின் பிறந்ததின நிகழ்வு கொண்டாடப்பட்டது.



டிசெம்பர் மாதம் 24ஆம் திகதி இயேசு கிறிஸ்துவின் ஜெயந்தி விழா கொண்டாடப்பட்டது. அன்று அன்புருவான இயேசுகிறிஸ்துவை சிந்தையில் அமர்த்திட சுவாமிஜியின் பஜனையும் சமய பாடசாலை மாணவியின் பேச்சும் நடைபெற்றன.




ஜனவரி மாதம் 1ஆம் திகதி கல்பதரு தினம் கொண்டாடப்பட்டது. பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர் கற்பதருவாய் நின்று பக்கதர்கள் வேண்டும் வரங்களை அளித்தமையை நினைவு கூரும் முகமாக இவ்விழா கொண்டாடப்படுகின்றது.





ஜனவரி மாதம் 4ஆம் திகதி எமது சமய பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா கொண்டாடப்பட்டது. அன்று திறைசேரி அதிகாரி திரு.என்.பத்மநான் அவர்களும் அவரின் பாரியாரும் கலந்து கொண்டு மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிச் சிறப்பித்தார்கள்.



ஜனவரி மாதம் 14ஆம் திகதி சுவாமி விவேகானந்தரின் 142ஆவது ஜயந்தி தினம் கொண்டாடப்பட்டது. அன்று காலை 5.30 முதல் மங்களாராத்தி, வேதபாராயணம், விசேட பூசை, பஜனை, ஹோமம் என்பன நடைபெற்று நண்பகல் ஆரத்தியும் மாலையில் 5.00 மணி முதல் பஜனை, அருளுரை, அர்ச்சனை, ஆரத்தியும் இடம்பெற்றது. பல கலைநிகழ்ச்சிகளுடன் 18ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை

சமய பாடசாலை மாணவர்களால் சுவாமி விவேகானந்தரின் பிறந்ததினவிழா கொண்டாடப்பட்டது.



ஜனவரி மாதம் 15ஆம் திகதி சூரிய பகவானிற்கு நன்றி செலுத்தும் முகமாக தைப்பொங்கல் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் இரத்மலானை, தந்தெனியாவத்தையில் வறிய மாணவர்களுக்குப் பொங்கல் நிகழ்ச்சியாக கோலப்போட்டி, விளையாட்டுப் போட்டிகள் என்பன நடாத்தப்பட்டு, பங்குபற்றியவர்களுக்கு சுவாமி இராஜேஸ்வரானந்தஜி. மஹராஜ் அவர்களால் பரிசில்கள் வழங்கப்பட்டன.








ஜனவரி மாதம் 25ஆம் திகதி ஞாயிறன்று எமது சமய பாடசாலை மாணவர்களுக்கு, இந்தியாவிலிருந்து வந்திருந்த பேராசிரியர் இரா.செல்வகணபதி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள்.



பெப்ரவரி மாதம் 18ஆம் திகதி சிவராத்திரி விரதம் அனுஷ்டிக்கப்பட்டது. அன்று இரவு முழுவதும் பஜனைகள், நாமஜெபம், ஹோமம், நான்கு ஜாமமும் பூசைகள் என்பன சிறப்பாக நடைபெற்றன.

பெப்ரவரி மாதம் 22ஆம் திகதி பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஜெயந்தி கொண்டாடப்பட்டது. காலை 5.30 முதல் மங்களாராத்தி, விஷ்ணு சகஸ்ரநாம பாராயணம், விசேட பூசை, பஜனை, ஹோமம் என்பன நடைபெற்று நண்பல் ஆரத்தியுடனும் மாலையில் 5.00 மணி முதல் பஜனை, அருளுரை, அர்ச்சனை, ஆரத்தியுடனும் பகவானின் ஜனனதினம் இனிதே நிறைவு பெற்றது.



மார்ச் 7ஆம் திகதி சர்வ மதத்தினரும் பங்குபற்றும் நமது சமய பாடசாலையின் இராமகிருஷ்ண ஜெயந்திவிழா நிகழ்வு, ஊர்வலம் என்பன நடைபெறும். அதில் இந்து, பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் சமய மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.


## சுவாமிஜியின் திருமுகம்

அன்பு இளைஞர்களே,

அனைவரிடமும் பிறருக்கு நன்மை செய்யும் மனப்பான்மையையும், மத உணர்வையும் உண்டாக்க முயற்சி செய்ய வேண்டும். வேலை செய்தேயாக வேண்டும். வெறுமனே உட்கார்ந்திருந்தால் எதுவும் நடைபெற மாட்டாது.

ஏழைகள், மற்றும் தாழ்ந்தவர்களிடம் வீடுவீடாகச் சென்று மத உபதேசங்கள் செய்யுங்கள். அதனுடன் புவியியல் போன்ற வேறு பாடங்களும் கற்பிக்க வேண்டும். ஏழைகளுக்கு எந்த உதவியும் செய்யாமல், வீணாக உட்கார்ந்து போகங்களை அனுபவித்தபடி இருப்பதில் எந்தப் பலனும் இல்லை. செயல், வழிபாடு, ஞானம் - முதலில் செயல், செயலால் மனம் தூய்மை அடைகிறது. இல்லாவிட்டால் சாம்பற் குவியலில் ஊற்றிய நெய் போல எல்லாம் பயனற்றுப் போய்விடும்.

உலக நன்மைக்காக உடல், மனம், சொல் அனைத்தையும் அர்ப்பணித்துவிட வேண்டும். *'மாத்ரு தேவோ பவ'* (தாயும் தந்தையுந் தெய்வம்) என்று படித்துள்ளீர்கள். *'தரித்திர தேவோ பவ, மூர்க்க தேவோ பவ'* (ஏழையும், பாமரனும் தெய்வம்) என்று நான் சொல்கிறேன். ஏழை, முட்டாள், பாமரன், துயரத்தில் உழல்பவன் இவர்கள் உங்களது தெய்வம் ஆகட்டும். இவர்களுக்கு ஆற்றும் சேவையே உயர்ந்த தர்மம் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள்.



இப்படிக்கு

சுவாமி விவேகானந்தா

## குறுக்கெழுத்துப் போட்டி - இல. 5

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | X | X |
| | X | | X | | X |
| X | | | | | |
| | | | X | | X |
| X | | X | | | |
| | | | | | X |

**இடமிருந்து வலம்**

1) பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மீகப் புதல்வன் எனச் சிறப்பித்துக் கூறப்படுபவர்.

4) சமய , ஆசார அனுஷ்டான முறைகளைக் கூறும் நூல்களை பொதுவாக இவ்வாறு அழைப்பர்.

5) சத்தியம் அஹிம்சை என்பவற்றை வாழ்ந்து காட்டிய ஓர் பெரியார்.

6) ஸ்ரீராமபிரானின் மகன்

7) இறைவன் எம் தலைவன் எனப் பொருள் படும் சொல்.

**மேலிருந்து கீழ்**

1) கிருஷ்ணர் மீது கொண்ட அளவற்ற அன்பினால் இன்றும் பிரேம பக்திக்கு இலக்கணமாகக் கூறப்படுபவர்.

2) பஞ்ச பூதத் தலங்களில் ஒன்று, நாயனார் ஒருவரின் வாழ்க்கையுடன் நெருங்கிய தொடர்புடையது.

3) ஸ்ரீராமகிருஷ்ணரின் வாயிற்காப்பாளன்

4) உலகம் எங்கும் இது நிலவ வேண்டும்

6) பாம்பின் உடலும் அசுரத் தலையையும் கொண்ட நவக்கிரக தேவன் (தலை கீழாக உள்ளது)

விடைகளுக்கான இறுதித் திகதி :
15 - ஏப்ரல் - 2004

அனுப்ப வேண்டிய முகவரி :
'அறநெறி அமுதம்'
ராமகிருஷ்ண மிஷன்
40, ராமகிருஷ்ண வீதி,
கொழும்பு-06.

---

## சென்ற இதழின் போட்டி முடிவுகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 தூ | ப | 2 ம் | X | 3 ஆ | சை |
| ய | X | ப் | X | தி | X |
| 4 அ | ம் | ஜ | 5 த் | X | 6 டா |
| ன் | X | X | 7 ர | 8 ம் | ச |
| 9 னை | 10 சே | X | 11 ச | ர | யு |
| X | 12 து | ரா | X | ப | X |

சரியான பதிலை எழுதி பரிசு பெறும் மாணவர்கள்:

க. சொரூபன், ஆண்டு 10
ராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை,
கொழும்பு 6.

வ. வானதி, ஆண்டு 10
ராமகிருஷ்ண மிஷன் சமய பாடசாலை,
கொழும்பு 6.

இவ்விதழ் வெளியீட்டன்று, அவர்களுக்கான பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

## உங்கள் பணி !

ஓதுதல், ஒழுகுதல், ஓதுவித்தல் என்பதற்கிணங்க, பல அருமையான நூல்களில் பொதிந்து கிடக்கும் ஆக்கங்களைத் திரட்டியெடுத்து அவற்றை மீண்டும் புதுப்பொலிவுடன் மக்களிடையே முக்கியமாக எமது மாணவ சமுதாயத்துக்குப் போய்ச்சேர வேண்டும் என்ற நோக்கத்துடன் செய்யப்படும் சிறு முயற்சியே இந்த அறநெறி அமுதம்!

எமது சமயத்திலே தோன்றிய மகாபுருஷர்கள் தெய்வீகமான மனித வாழ்க்கைக்காகவென விட்டுச்சென்ற நற்கருத்துக்கள் பல புத்தகங்களினுள்ளே புதைந்து கிடக்கின்றன. அவற்றை நமது மாணவர்களும் தேடிக் கற்கத் தூண்டுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக அமைவது மட்டுமல்லாமல், தாம் கற்றறிந்து திரட்டிய முத்துக்களைக் கோர்த்து இதழ் எனும் ஆரமாக வெளிக்கொணர்வதற்கும் வழிவகுக்கின்றது.

இந்நூல் ஒவ்வொரு மாணவனையும் சென்றடைய வேண்டும் இதனால் பல்லாயிரக்கணக்கானோருக்கு சமய விழிப்புணர்ச்சி ஏற்பட வேண்டும் என்பதே எமது இலக்கு! அதனாலேயே இப்புத்தகத்தின் விலை ரூ.10 இற்கு மேற்படாதவாறு பேண வேண்டியுள்ளது.

எனவே நீங்களும் இவ்விதழ் ஆக்கப்பணியில் கலந்து கொள்ள முன்வர வேண்டும் என்று அன்புடன் விரும்புகிறோம். நீங்கள் பின்வரும் முறைகளில் பணிபுரியலாம்.

1. இந்நூலை நீங்கள் வாங்குவது மட்டுமல்லாமல், கூடியளவு பிரதிகளை வாங்கித் தெரிந்தவர்களுக்குக் கொடுத்தல்.
2. இம்முயற்சிக்கு நன்கொடைகளை வழங்கல்.
3. வாழ்த்துக்கள் அல்லது வியாபார விளம்பரங்களை அளித்தல்.

**உங்கள் ஆதரவுக்கு நன்றிகள்!**

அன்பளிப்பு : ரூபா. 10.00